**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| THE COURT OF | : | II ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THANJAVUR. | | | |
| Case No | : | SC-73/2020 | | | |
| Prosecution Witness | : | PW16 | | | |
| Name | : | அய்யப்பன் | Caste | : | |
| Father Name | : | கலியன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 40 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 04.04.2024.**

***எதிரிகள் 1, 4, 6, 7, 9, 10, 11 வருகை***
***2, 3, 5, 8 வது எதிரிகள் வருகை இல்லை குவிமுச பிரிவு 317 கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.***

**அரசு தரப்பில் முதல் விசாரணை :–**

நான் மருவூர் தெற்கு தெருவில் வசிக்கிறேன். பால் வியாபாரம் செய்கிறேன். 1வது எதிரி என்னுடைய மாமா மகன். ஆஜர் எதிரிகளை தெரியும். 1வது எதிரி கொலை வழக்கில் ஆஜராகி வருகிறார். எனக்கு வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. எதிரி முருகராஜின் தம்பி சரவணனை தெரியும் அவர் சென்னையில் இருக்கிறார்.

**அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பிறழ் சாட்சியாக்கி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலீசார் விசாரித்தபோது 12.06.2019 அன்று இரவு சரவணன் முருகராஜின் சின்ன மகள் 1வது எதிரியின் மகளை என் வீட்டிற்கு அழைத்து வந்து 1வது எதிரியின் மகளை வீட்டில் இருக்க வைத்துவிட்டு என்னிடம் 1வது எதிரியின் மகளுக்கு சின்ன பிரச்சனை உங்கள் வீட்டில் இருக்கட்டும், இரண்டு நாள் கழித்து அழைத்து செல்கிறேன் என்று கூறி சென்ற பிறகு 1வது எதிரியின் மகளுடன் என்ன பிரச்சனை என்று கேட்டதாகவும், அப்போது அவர் எதுவும் பேசவில்லை என்றும், 14.06.2019 அன்று கொலை செய்யப்பட்டு இறந்து போன பிரசாந்த்

வழக்கு பற்றி விசாரித்தபோது வழக்கு பற்றி நான் அறிந்து கொண்டேன் என்று சொன்னாலும், அப்போது பிரசாந்த் கொலை வழக்கு சம்பந்தமாக முருகராஜ், சுரேந்திரன், தினேஷ், வெங்கடேசன், பாரதி, குமார், பார்த்திபன் ஆகியோரை கைது செய்திருப்பதாக 1 வது எதிரியின் மகளிடம் கூறியபோது அறிந்து கொண்டேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் உறவினர்களாக இருப்பதாலும், நண்பர்களாக இருப்பதாலும், அவர்களை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பிரசாந்தை எனக்கு தெரியாது. முருகராஜின் மகளுக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றும் எனக்கு தெரியாது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.